நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் தென்னை விவசாயம்: வேளாண் பல்கலை. துணைவேந்தர்

First Published : 03 Sep 2012 10:32:03 AM IST

கோவை, செப். 2: தென்னை விவசாயம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி தெரிவித்தார்.

கோவை ஈச்சனாரியில் உள்ள ரத்தினம் மேலாண்மைக் கல்லூரி சார்பில் கொண்டாடப்பட்ட உலக தென்னை தினத்தின் போது அவர் பேசியது:

கடுமையான உழைப்பாளிகளைக் கொண்ட விவசாய நாடாக இந்தியா திகழ்கிறது. ஆனால், விவசாய நிலங்கள் கட்டடப் பூங்காக்களாக மாறி வருகின்றன. இதில் விவசாயிகள் தங்களிடம் இருக்கும் நிலங்களைக் கொண்டு நமக்கு உணவு அளிக்கும் நோக்கத்தோடு போராடி வருகின்றனர்.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை தென்னை விவசாயம் உயர்த்தியுள்ளது. இதே போல தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவி வருகிறது. தென்னையின் துணைப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருள்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. இதே போல வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதால் பெருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது. நவீன தொழில்நுட்பங்களை கொண்டு தென்னை விவசாயிகள் அதிக லாபம் பெற முடியும்.

தென்னை ஒரு உணவுப் பொருள் மட்டுமின்றி மருந்துப் பொருள் என்பதையும் பொதுமக்கள் உணர வேண்டும். தென்னை விவசாயிகளுக்கு உதவ தமிழக அரசும், வேளாண்மைப் பல்கலைக்கழகமும் தயாராக உள்ளது என்றார்.

பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுகுமார் பேசியது:

கோவை - பொள்ளாச்சி அகல ரயில்பாதை திட்டம் நிறைவேறிய பிறகு, வடமாநிலங்களுக்கு தேங்காய் மற்றும் இளநீர் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். திருமூர்த்தி நகரில் 100 ஏக்கரில் தென்னங்கன்று பண்ணை உருவாக்க அரசு திட்டம் வகுத்துள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு தரமான கன்றுகள் கிடைப்பதன் மூலம் விளைச்சலும் அதிகரிக்கும். தென்னை விவசாயிகளின் நலனுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன் என்றார்.

தென்னை அபிவிருத்திக் குழு துணை இயக்குநர் ஹேமசந்திரா பேசியது:

தென்னை பயிரிட விவசாயிகள் முன்வர வேண்டும். நவீன தொழில்நுட்பத்தோடு சரியான முறையில் பயிர் செய்தால், அதிக லாபம் தரும் பணப்பயிர் ஆகும். தென்னை விவசாயிகள்

ஒருங்கிணைந்து கூட்டுறவுச் சங்களை ஏற்படுத்தி அதன் மூலம் தென்னை மற்றும் அதனைச் சார்ந்த பொருள்களை விற்பனை செய்தால் இடைத் தரகர்களின் செயல்பாடுகள் குறைந்து அதிக லாபம் பெற முடியும் என்றார்.

தென்னை வளர்போர் சங்கத்தின் செயலாளர் பன்னீர்செல்வம் பேசியது:

தென்னை மரத்தில் சராசரியாக 110 தேங்காய்கள் மட்டுமே காய்க்கின்றன. இதனை 220 தேங்காய்களாக அதிகரிக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும். இந்திய உணவுக் கழகம் போன்று தென்னை விவசாயிகளுக்கு தனிக் கழகம் உருவாக்கி அரசே தேங்காய்களை கொள்முதல் செய்ய வேண்டும். தேங்காய்களை மதிப்புகூட்டு பொருளாக சந்தைப்படுத்த வேண்டும் என்றார்.

ரத்தினம் கல்வி குழுமத் தலைவர் மதன் ஏ.செந்தில், கல்லூரி முதல்வர் பி.முருகேசன், கல்லூரி முதன்மை நிர்வாகி ஆர்.மாணிக்கம், மனித வள மேம்பாட்டு அதிகாரி ஏ.சி.பிரபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## குருந்தன்கோடு ஒன்றிய திமுக விவசாய அணி அமைப்பாளர் நியமனம்

First Published : 03 Sep 2012 12:37:36 PM IST

தக்கலை, செப்.2:÷குருந்தன்கோடு ஒன்றியத்தில் திமுக புதிய விவசாய அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

÷குருந்தன்கோடு ஒன்றியத்தில் மாவட்டச் செயலர் என்.சுரேஷ்ராஜன், ஒன்றிய கழகச் செயலர் எப்.எம். ராஜரத்தினம் ஆகியோரது பரிந்துரையின்பேரில் விவசாய அணி அமைப்பாளராக எ.கோபால்தாஸ், துணை அமைப்பாளர்களாக அ.சேவியர் ஏசுதாஸ், பி.ஈஸ்வரபிள்ளை, த.ஆசிர்சேம் ஆகியோரை தலைமைக் கழக விவசாய அணி அமைப்பாளர் கே.பி. இராமலிங்கம், திமுக தலைவர் கருணாநிதி ஒப்புதலுடன் நியமித்துள்ளார்.

÷நியமனம் செய்யப்பட்ட நிர்வாகிகள் அனைவரும் திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

## "கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் கடன் பெற்று பயன்பெறலாம்'

First Published : 03 Sep 2012 12:12:30 PM IST

திருவாரூர், செப். 2: பெருகவாழ்ந்தானில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் கடன் வசதிப் பெற்று பயன்பெறலாம் என்றார் மாநில உணவுத் துறை அமைச்சர் ஆர். காமராஜ்.

திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தானில் கூட்டுறவு வங்கியின் புதிய கிளை அலுவலகத்தைத் திறந்துவைத்து ரூ. 1.04 கோடியில் 398 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கி அவர் பேசியது:

இந்த புதிய கூட்டுறவு வங்கிக் கிளையில் பெருகவாழ்ந்தான், சித்தமல்லி, புத்தகரம், பெருவிடைமருதூர், மாரி நகரி, எளவனூர், வல்லூர் ஆகிய 7 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் அதிகம் விவசாயத்தையே நம்பியுள்ளது.

எனவே, இந்தப் புதிய கிளை அலுவலகம் விவசாயிகளுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால், விவசாயிகள் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு கடன் வசதி பெற்று பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்றார்.

விழாவில் மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி இணைப் பதிவாளர் தனி அலுவலர் அந்தோனிசாமி ஜான்பீட்டர், திருவாரூர் மண்டல இணைப் பதிவாளர் சந்திரசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஆந்திர மண்டலத்தில் செப்.21-ல் மஞ்சள் விலை நிர்ணயம்: இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம்

First Published : 03 Sep 2012 02:16:26 PM IST

ஈரோடு, செப். 2: ஆந்திர மண்டலத்துக்கான மஞ்சள் விலை செப்டம்பர் 21-ம் தேதி நிர்ணயிக்கப்படும் என்று இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் பி.கே. தெய்வசிகாமணி ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் ஈரோடு, தாளவாடி, மெட்டலா, நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை, சேலம் மாவட்டம் சேலம், ஆத்தூர், தருமபுரி மாவட்டம் அரூர், கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் ஆகிய இடங்களில் மஞ்சள் சந்தைகள் உள்ளன.

விவசாயிகள் சங்க மாநாட்டில் எடுத்த முடிவின்படி, ஒரு குவிண்டால் மஞ்சளை ரூ. 9,000-க்கு குறைவாக விற்கமாட்டோம் என விவசாயிகள் தெரிவித்து வருகின்றனர். இதனால், சந்தைக்கு மஞ்சள் வரத்து குறைந்துவிட்டது.

வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, பெரம்பலூர் உள்ளிட்ட தொலைதூரப் பகுதிகளில் இருந்து வரும் விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்துவிட்டு செல்கின்றனர். ஈரோடு, கரூர், நாமக்கல் மாவட்ட விவசாயிகள் மஞ்சள் சந்தையைப் புறக்கணித்து, மஞ்சளை இருப்பு வைத்துவிட்டனர்.

மஞ்சளை இருப்பு வைத்து கடன் பெற்றுள்ள விவசாயிகளை, கடனைச் செலுத்தும்படி நிர்பந்தம் செய்யும் தனியார் மண்டிக்காரர்கள் மீதும், இருப்பு வைக்கப்படும் மஞ்சளுக்கு உரிய ரசீது வழங்காத மண்டிக்காரர்கள் மீதும் மாவட்ட நிர்வாகத்திடம் விவசாயிகள் புகார் செய்ய வேண்டும்.

பணத்தேவையின் காரணமாக சிரமப்படும் விவசாயிகளுக்கு வங்கிகளில் தேவையான பொருளீட்டுக் கடனை பெற்றுத்தரவும், இருப்பு வைப்பதற்கு தேவையான கிடங்கு வசதிகளையும் பெறுவதற்கு இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் உதவி வருகிறது.

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் மார்க்கெட் கமிட்டிகளும், வேளாண் கூட்டுறவுச் சங்கங்களும் விவசாயிகளுக்கு தாராளமாக பொருளீ்ட்டுக் கடனை வழங்குகின்றன. மஞ்சள் தொடர்ந்து இருப்பு வைக்கப்பட்டு வருவதால் இன்னும் 10 நாள்களில் விலை உயரும்.

ஆந்திர மண்டலத்துக்கான மஞ்சள் விலையை செப். 21-ம் தேதி நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. மகாராஷ்டிர மண்டலத்துக்கான விலை விரைவில் நிர்ணயம் செய்யப்படும். சங்கம் அறிவித்துள்ளபடி, ஒரு குவிண்டாலுக்கு ரூ. 9,000 என்னும் விலை அடுத்த அறிவிப்பு வெளியாகும் வரை தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

## 92 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள்

First Published : 03 Sep 2012 01:03:52 PM IST

போளூர், செப். 2: போளூரை அடுத்துள்ள கலசப்பாக்கம் ஊராட்சியில் 92 பயனாளிகளுக்கு ரூ.11.50 லட்சம் மதிப்பில் விலையில்லா ஆடுகளை எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஞாயிற்றுக்கிழமை வழங்கினார்.

விழாவில் அவர் பேசுகையில், கலசப்பாக்கம் தொகுதியில் 30 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. கலசப்பாக்கம் தாலுகா அமைக்க தற்போது ரூ.4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேல்சோழங்குப்பத்தில் ரூ.50 லட்சத்தில் அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கப்படுகிறது. இது பயன்பாட்டுக்கு வரும்போது, அங்கிருந்து 30 வழித்தடங்களில் பேருந்துகள் இயங்கப்படும். கலசப்பாக்கத்தில் வேலூர் - திருவண்ணாமலை சாலையில் ரூ. 50 லட்சத்தில் நிழற்குடை, ரூ. 28 லட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படும். ஒன்றிய நிதியில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டப்படும் என்றார் எம்எல்ஏ.

விழாவில், ஒன்றியக்குழுத் தலைவர் ஜெயராமன், துணைத் தலைவர் கருணாமூர்த்தி, கால்நடை மருத்துவர் கேசவகுமார், அதிமுக ஒன்றியச் செயலர் திருநாவுக்கரசு, தொகுதிச் செயலர் கோவிந்தராஜ், ஊராட்சித் தலைவர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விவசாயிகள் கவனத்துக்கு....

First Published : 03 Sep 2012 12:06:09 PM IST

பெரம்பலூர், செப். 2: பெரம்பலூர் மாவட்டத்தில் வட்டியில்லா பயிர்க்கடன் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளன.

இதுகுறித்த மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது செய்திக்குறிப்பு: செப். 8 அன்று வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகத்திலும், செப்.9 அன்று வேப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், செப்.15 அன்று ஆலத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், செப்.16 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் அந்தந்த வட்டார விவசாயிகளுக்காக காலை 10 மணி முதல் வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. முகாமில், வருவாய்த் துறை மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் சிட்டா, சொத்து பொறுப்பு பட்டியல், கிராம கணக்கு நகல் ஆகிய ஆவணங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிராம நிர்வாக அலுவலகம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம் ஆகிய பகுதிகளிலும் சொத்து பொறுப்பு பட்டியல் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களை, சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலும், முகாமிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வெற்றிலை விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

First Published : 03 Sep 2012 02:11:20 PM IST

பரமத்திவேலூர், செப். 2: பரமத்திவேலூர் வெற்றிலை ஏலச் சந்தையில், வெற்றிலை விலை உயர்ந்ததால் வெற்றிலை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டத்தில் காவிரி ஆற்றுக் கரையோரப் பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் முக்கிய பணப் பயிர்களான வெற்றிலை, வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன.

இதில் பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அணிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், பாலப்பட்டி, குன்னிப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை சாகுபடி அதிக அளவில் நடைபெறுகிறது.

இங்கு விளையும் வெற்றிலைகள் கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிரம், குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், ஊட்டி, கோவை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் தினந்தோறும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கடந்த வாரம் பரமத்திவேலூர் வெற்றிலை ஏலச் சந்தையில் கற்பூரி வெற்றிலை (104 கவுளி கொண்ட சுமை ஒன்று) 400 ரூபாய்க்கும், வெள்ளை வெற்றிலை சுமை ஒன்றுக்கு 3,500 ரூபாய்க்கும் ஏலம் போனது.

இந்த வாரம் சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் கற்பூரி வெற்றிலை சுமை ஒன்றுக்கு 900 ரூபாயும், வெள்ளை வெற்றிலை சுமை ஒன்றுக்கு 4,000 ரூபாயிக்கும் ஏலம் போனது.

மேலும் அரைக் காம்பு வெற்றிலை 1,500 ரூபாய்க்கும் ஏலம் போனது.

இந்த விலை உயர்வு வெற்றிலை பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. தற்போது திருமணம், விஷேச வைபவங்கள் அதிக அளவில் நடைபெறுவதால் வெற்றிலை விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## "கரும்பு வெட்டுக்கூலியை ஆலைகளே வழங்க வேண்டும்'

First Published : 03 Sep 2012 12:04:47 PM IST

கரூர், செப். 2: கரும்பு வெட்டுக் கூலியை ஆலைகளே முழுமையாக வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கரும்பு வெட்டும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நலச் சங்க நிறுவனர் குமார், தமிழக முதல்வர், மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள கரும்புகளை வெட்டும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய கூலித் தொகையை, சம்பந்தப்பட்ட ஆலை நிர்வாகங்கள் விவசாயிகளிடம் பிடித்தம் செய்தே வழங்குகின்றன.

ஏற்கெனவே கரும்பு விளைச்சலுக்காக அதிகம் செலவு செய்து, குறைந்த லாபமே பெற்று வரும் விவசாயிகளுக்கு, வெட்டுக்கூலித் தொகை பெரும் சுமையாக உள்ளது. எனவே வெட்டுக் கூலித் தொகையை ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக ஆலை நிர்வாகங்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தி, முடிவை அறிவிக்க வேண்டும்.

கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் பாம்பு, தேள் கடித்து உயிரிழக்கும் சூழலும் உள்ளது.

உயிரிழக்கும் தொழிலாளர்களுக்கு சம்பந்தப்பட்ட ஆலை நிர்வாகங்களே இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்றும் அந்த மனுவில் தெரிவித்துள்ளார்.

## அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு : தமிழக அரசு

First Published : 03 Sep 2012 12:09:56 PM IST

சென்னை, செப்., 03 : தமிழகத்தில் அதிக மகசூல் பெறும் விவசாயிளுக்கு ரொக்கப் பரிசு அளிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு அளித்துள்ள அறிக்கையில், நவீன தொழில்நுட்பத்தை புகுத்தி, விவசாயத்தை சிறப்பாக மேற்கொண்டு அதிக மகசூல் பெறும் விவசாயிகளைத் தேர்வு செய்து முதல் பரிசாக ரூ.50,000மும், இரண்டாம் பரிசாக ரூ.20,000மும், மூன்றாம் பரிசாக ரூ.10,000மும் வழங்கப்படும்.

தமிழகம் முழுவதும் சுமார் 36 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு இந்த ரொக்கப் பரிசு வழங்கப்படும். இதற்காக தமிழக அரசு ரூ.11.40 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

## காவிரி நீர் இல்லாததால் நேரடி நெல் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள்

First Published : 04 Sep 2012 01:39:07 AM IST



காட்டுமன்னார்கோவில் அருகே எடையார் கிராமத்தில் நேரடி நெல் விதைப்பு பணியில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள்.

சிதம்பரம், செப்.3: போதிய நீர் இல்லாததால் காவிரி டெல்டா கடைமடை பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் பெரும்பாலான விவசாயிகள் தற்போது நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர். 30 நாட்களுக்குள் மழை பெய்து தண்ணீர் வந்தால்தான் இந்த விதைகள் கருகாமல் இருக்கும் என விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

÷காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் படி தமிழகத்திற்கு உரிய நீரைத் தர கர்நாடக அரசு மறுத்துவிட்டது. இதனால் மேட்டூர் நீர் மட்டம் குறைவாக உள்ளதால் சம்பா சாகுபடிக்கு நீர் திறந்து விடப்படவில்லை.

÷தமிழகத்தில் மழையும் பொய்த்து விட்டதால் சம்பா சாகுபடி மேற்கொள்ள உள்ள விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். குறிப்பாகக் கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு தானே புயலால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பெருத்த நஷ்டமடைந்தனர். ÷இந்த ஆண்டு போதிய நீரின்றி குறுவை சாகுபடி மேற்கொள்ளவில்லை. தற்போது மேட்டூரில் இருந்து நீர் திறந்து விட காலதாமதம் ஆவதால் சம்பா சாகுபடியும் கேள்விக்குறியாகி உள்ளது.

÷இந்நிலையில் காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள திருநாரையூர், சர்வராஜன்பேட்டை, சிறகிழந்தநல்லூர், எடையார், ராதாம்பூர், எள்ளேரி, வீரநத்தம், நெடும்பூர், உடையூர் உள்ளிட்ட கிராமங்களில் 50 சதவீத விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் இறங்கியுள்ளனர். போர்வெல் உள்ளவர்கள் மட்டும் நாற்றாங்கல் நடவுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

÷இது குறித்து கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி தெரிவித்தது:

÷நேரடி நெல் விதைப்பு மூலம் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு விதை நெல் ரூ.900-மும், உழவு கூலி ரூ.2,500, ஆள் கூலி உள்பட ரூ.4ஆயிரம் செலவாகிறது. தமிழக முதல்வர் அறிவித்துள்ள சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு டிராக்டர் செலவு ரூ.250 வழங்க உத்தரவிட்டுள்ளது.

÷அதுவும் குறிப்பிட்ட அளவு விவசாயிகளுக்கு மட்டும் வழங்க உத்திரவிட்டுள்ளது. நேரடி நெல் விதைப்பு முறையில் 4 முறை டிராக்டர் ஓட்ட ரூ.3600 செலவாகிறது. எனவே விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் உழவுக் கூலி வழங்க வேண்டும். அதுபோன்று டி.ஏ.பி. ரசாயன உரத்தின் விலை தற்போது 3 மடங்கு உயர்ந்துள்ளது.

÷எனவே ஏக்கருக்கு 2 மூட்டை ரசாயன உரம் அரசு வழங்க வேண்டும். நேரடி நெல் விதைப்பில் விதைத்த பின்னர் 30 நாட்களுக்கு பின்னர் மழை பெய்தால் அல்லது மேட்டூர் அணையில் இருந்து நீர் திறந்து விட்டப்பட்டால் தான் விதை கருகாமல் முளைக்கும் வாய்ப்புள்ளது என்றார்.

## அதிக விளைச்சலைப் பெறும் விவசாயிகளுக்கு பரிசுகள்: ஜெயலலிதா

First Published : 04 Sep 2012 03:00:29 AM IST



சென்னை, செப். 3: அதிக விளைச்சலைப் பெறும் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கும் திட்டத்துக்காக ரூ.11.40 லட்சம் நிதி ஒதுக்கி முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக அரசு திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: உணவு தானிய உற்பத்தியில் உயரிய இலக்கை அடையும் வகையில், நவீன தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நடவடிக்கைகளையும், நெல், பயறு வகைகள், சிறு தானியங்கள் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளையும் முதல்வர் ஜெயலலிதா எடுத்து வருகிறார்.

அந்த வகையில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினைக் கடைப்பிடித்து, மாநிலத்திலேயே அதிக விளைச்சலைப் பெறும் விவசாயிக்கு, ஒவ்வொரு ஆண்டும் சிறப்புப் பரிசுத் தொகையாக ரூ.5 லட்சமும், ரூ.3,500 மதிப்புடைய பதக்கமும் குடியரசு தினத்தன்று வழங்க முதல்வர் ஜெயலலிதா ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்.

இதேபோன்று, நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, மானாவாரி நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளில் அதிக மகசூலைப் பெறும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

நெல் (மானாவாரி), சோளம் (மானாவாரி மற்றும் இறவை), கேழ்வரகு (மானாவரி மற்றும் இறவை), சாமை (மானாவாரி), துவரை (மானாவாரி மற்றும் இறவை), பச்சைப் பயறு (மானாவாரி மற்றும் இறவை) மற்றும் உளுந்து (மானாவாரி மற்றும் இறவை) ஆகியவற்றின் சாகுபடியில் அதிகமான மகசூல் பெறும் விவசாயிகளைத் தேர்வு செய்து, ஒவ்வொரு இனத்துக்கும் முதல் பரிசாக ரூ.50 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ.25 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.10 ஆயிரமும் வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த விருதுகள் வழங்குவதற்காக ரூ.11.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் தமிழகத்தில் 36 விவசாயிகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படும். இதன்வழியாக, நவீன தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து நெல் (மானாவாரி), சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகள் உற்பத்தித் திறனை அதிகரிக்க விவசாயிகளிடையே விழிப்புணர்வும், போட்டி மனப்பான்மையும் ஏற்பட்டு உற்பத்தி அதிகரிக்க வழிவகை ஏற்படும் என அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவிரி நீர் இல்லாததால் நேரடி நெல் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள்

First Published : 04 Sep 2012 01:39:07 AM IST



காட்டுமன்னார்கோவில் அருகே எடையார் கிராமத்தில் நேரடி நெல் விதைப்பு பணியில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள்.

சிதம்பரம், செப்.3: போதிய நீர் இல்லாததால் காவிரி டெல்டா கடைமடை பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் பெரும்பாலான விவசாயிகள் தற்போது நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர். 30 நாட்களுக்குள் மழை பெய்து தண்ணீர் வந்தால்தான் இந்த விதைகள் கருகாமல் இருக்கும் என விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

÷காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் படி தமிழகத்திற்கு உரிய நீரைத் தர கர்நாடக அரசு மறுத்துவிட்டது. இதனால் மேட்டூர் நீர் மட்டம் குறைவாக உள்ளதால் சம்பா சாகுபடிக்கு நீர் திறந்து விடப்படவில்லை.

÷தமிழகத்தில் மழையும் பொய்த்து விட்டதால் சம்பா சாகுபடி மேற்கொள்ள உள்ள விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். குறிப்பாகக் கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு தானே புயலால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பெருத்த நஷ்டமடைந்தனர். ÷இந்த ஆண்டு போதிய நீரின்றி குறுவை சாகுபடி மேற்கொள்ளவில்லை. தற்போது மேட்டூரில் இருந்து நீர் திறந்து விட காலதாமதம் ஆவதால் சம்பா சாகுபடியும் கேள்விக்குறியாகி உள்ளது.

÷இந்நிலையில் காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள திருநாரையூர், சர்வராஜன்பேட்டை, சிறகிழந்தநல்லூர், எடையார், ராதாம்பூர், எள்ளேரி, வீரநத்தம், நெடும்பூர், உடையூர் உள்ளிட்ட கிராமங்களில் 50 சதவீத விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் இறங்கியுள்ளனர். போர்வெல் உள்ளவர்கள் மட்டும் நாற்றாங்கல் நடவுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

÷இது குறித்து கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி தெரிவித்தது:

÷நேரடி நெல் விதைப்பு மூலம் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு விதை நெல் ரூ.900-மும், உழவு கூலி ரூ.2,500, ஆள் கூலி உள்பட ரூ.4ஆயிரம் செலவாகிறது. தமிழக முதல்வர் அறிவித்துள்ள சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு டிராக்டர் செலவு ரூ.250 வழங்க உத்தரவிட்டுள்ளது.

÷அதுவும் குறிப்பிட்ட அளவு விவசாயிகளுக்கு மட்டும் வழங்க உத்திரவிட்டுள்ளது. நேரடி நெல் விதைப்பு முறையில் 4 முறை டிராக்டர் ஓட்ட ரூ.3600 செலவாகிறது. எனவே விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் உழவுக் கூலி வழங்க வேண்டும். அதுபோன்று டி.ஏ.பி. ரசாயன உரத்தின் விலை தற்போது 3 மடங்கு உயர்ந்துள்ளது.

÷எனவே ஏக்கருக்கு 2 மூட்டை ரசாயன உரம் அரசு வழங்க வேண்டும். நேரடி நெல் விதைப்பில் விதைத்த பின்னர் 30 நாட்களுக்கு பின்னர் மழை பெய்தால் அல்லது மேட்டூர் அணையில் இருந்து நீர் திறந்து விட்டப்பட்டால் தான் விதை கருகாமல் முளைக்கும் வாய்ப்புள்ளது என்றார்.

தினமலர்

வெள்ளரிக்காய் அமோக விளைச்சல்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,01:08 IST

சின்னசேலம்:நைனார்பாளையம் அருகில் உள்ள அனுமனந்தல் கிராமத்தில் 50 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள வெள்ளரிக்காய் அமோக விளைச்சல் கண்டுள்ளது. சின்னசேலம் அடுத்த நைனார்பாளையம் அடுத்த அனுமனந்தல் கிராம விவசாயிகளுக்கு தனியார் கம்பெனி மூலம் வெள்ளரிக்காய் விதை வழங்கப்பட்டுள்ளது. பயிரிடும் முறைகள் பற்றி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. வெள்ளரிக்காய் 90 நாள் முடிவில் மகசூல் அளிக்கிறது. ஒரு ஏக்கருக்கு அனைத்து செலவும் போக 80 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். பயிரிட்ட 30 நாட்களில் இருந்து காய்விட துவங்கும். தினசரி காய்களை பறிக்க வேண்டும். சின்ன காய்களுக்கு கிலோ 23 ரூபாயும், பெரிய காய்களுக்கு கிலோ 12 ரூபாயும், அதைவிட பெரியதாக இருந்தால் 5 ரூபாயும், அதைவிட பெரிய காய் 1 ருபாயும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்து அமெரிக்கா, சீனா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு

ஏற்றுமதி செய்கின்றனர்.கடந்த 5 ஆண்டுகளாக இப்பகுதி விவசாயிகள் வெள்ளரிக்காய் சாகுபடி செய்து, லாபம் ஈட்டி வருகின்றனர்.

கருணை கிழங்கு பயிரிடுவதில் சின்னசேலம் விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,01:08 IST

சின்னசேலம்:சின்னசேலம் பகுதி கிராமங்களில் கருணை கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.சின்னசேலம் அடுத்த ஈசாந்தை பகுதியில் 100 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் கருணை கிழங்கு (சேனை கிழங்கு) பயிரிட்டுள்ளனர். ஈசாந்தை ஊராட்சி பகுதியில் முழுவதும் செம்மண் பகுதியாக அமைந்துள்ளதால், கருணை கிழங்கு ஆண்டு முழுவதும் பயிரிட ஏற்றதாக உள்ளது.இதுபற்றி அப்பகுதி விவசாயி ராமச்சந்திரன் கூறுகையில், கருணை கிழங்கு சாகுபடியின்போது ஐந்து முறை களை எடுத்தல் வேண்டும். அதிக தண்ணீர் தேவையில்லை. ஆண்களுக்கு 300 ரூபாயும், பெண்களுக்கு 150 ரூபாய் ஒரு நாள் கூலியாக அளிக்கபடுகிறது. இப்பகுதியில் விளையும் கிழங்குகளுக்கு ஆந்திரா, மைசூர் உள்ளிட்ட பகுதிகளில் சிறப்பான வரவேற்பு உள்ளது என்றார்.

விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,01:07 IST

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டியில் விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.கூட்டத்திற்கு ஒன்றிய சேர்மன் சுமதி நாகப்பன் தலைமை தாங்கினார். வேளாண்மை தொழில் நுட்ப மேலாளர் நமச்சிவாயம் வரவேற்றார். வேளாண் துறை உதவி இயக்குனர் ஹரிகிருஷ்ணன், பயிர்சாகுபடி பற்றி விளக்கிப் பேசினார்.கூட்டத்தில், விவசாயிகள் பயிர் சாகுபடி தகவல்களை கேட்டறிவது பற்றி அதிகாரிகள் விளக்கமளித்தனர். இதன் பின், ஆத்மா குழு தலைவராக குமாரசாமி தேர்வு செய்யப்பட்டார். அவர் ஏற்புரை ஆற்றினர்.அப்துல்சலாம், அப்பாசாமி, ரவிச்சந்திரன், காசி, சரவணன் உள்ளிட்ட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஆட்டுக்கொல்லி நோய் விழிப்புணர்வு பயிற்சி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 03,2012,23:59 IST

விழுப்புரம்:விழுப்புரத்தில் தேசிய அளவிலான ஆட்டுக் கொல்லி நோய் தடுப்புத் திட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது.விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த முகாமிற்கு கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் அழகரசன் தலைமை

தாங்கினார்.கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர் மகேந்திரன், உதவி மருத்துவர் சந்திரன் ஆகியோர் ஆட்டுக்கொல்லி நோயினால் ஏற்படும் பொருளாதார இழப்புகள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து விளக்கமளித்தனர். கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர்கள் குருவையா, ராஜேந்திரன், குபேந்திரன், கால்நடை மருத்துவர்கள் மனோகரன், அன்பழகன் பயிற்சி அளித்தனர். இதில் விவசாயிகள் பலர் பயிற்சி பெற்றனர்.

## அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,06:58 IST

நாமக்கல்: நாமக்கல் வட்டாரத்தில், அட்மா திட்டத்தின் கீழ், வேளாண் துறை மூலம் துவரை நாற்றங்கால் நடவு குறித்த, பண்ணைப்பள்ளி, தளிகை கிராமத்தில் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் ஜோ தேடியஸ் துவக்கி வைத்தார். துவரையில் புதிய தொழில் நுட்பமான, நாற்றங்கால் நடவு பற்றி விளக்கப்பட்டது. வேளாண் அலுவலர் செல்வி, விதை நேர்த்தி, நடவு முறை தொழில் நுட்பங்கள் பள்ளி செயல்முறை விளக்கம் அளித்தார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுபத்ரா, பாலிதீன் பைகள் மூலம் துவரை நடவு செய்யும் முறை குறித்து செயல்விளக்கம் அளித்தார். மேலும், பைகளின் அளவு ஆறுக்கு மூன்று என்ற அளவில் இருக்க வேண்டும். விதை நடவு செய்த பின், மர நிழலில் பைகளை வைத்து பராமரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.இப்பண்ணை மூலம், 25 விவசாயிகள் பயன்பெற்றனர். ஏற்பாடுகளை, வட்டார தொழில் நுட்ப வல்லுனர்கள் தினேஷ்வரன், சங்கர் கணேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

## நிலக்கடலையில் அதிக மகசூல்: விவசாயிக்கு பரிசு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,06:49 IST

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் நடந்த மக்கள் குறைதீர் கூட்டத்தில், நிலக்கடலை பயிரில் அதிக மகசூல் பெற்ற விவசாயிக்கு பரிசு வழங்கப்பட்டது. தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில், டி.ஆர்.ஓ., ராமர் தலைமையில் மக்கள் குறைதீர் கூட்டம் நடந்தது. பொது மக்களிடம் இருந்து பல்வேறு கோரிக்கை வலியுறுத்தி, 495 மனுக்கள் பெறப்பட்டது. மனுக்கள் சம்பந்தப்பட்ட அலுவரல்களுக்கு அனுப்பிப டி.ஆர்.ஓ., பரிந்துரை செய்தார்.வேளாண் துறை சார்பில் நடத்தப்பட்ட பயிர் மகசூல் போட்டியில், நிலக்கடலை பயிர் செய்த மொரப்பூர் வட்டாரத்தை சேர்ந்த விவசாயி முனியம்மாள் என்பவர் ஒரு ஹெக்டேருக்கு, 3 ஆயிரத்து 810 கிலோ மகசூல் பெற்றதை தொடர்ந்து அவருக்கு முதல் பரிசு, 15 ஆயிரத்துக்கான

காசோலையை டி.ஆர்.ஓ., ராமர், முனியம்மாளிடம் வழங்கினார்.மேலும், தர்மபுரி தாலுகாவை சேர்ந்த நான்கு பேருக்கு, ஆயிரம் ரூபாய் உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டன. வேளாண் இணை இயக்குனர் மனோகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) ராஜசேகரன், ஆதிதிராவிடர் நல அலுவலர் கிரிஜாதேவி, துணை ஆட்சியர் (பயிற்சி) சிவப்ரியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பன்னீர் கரும்பு சாகுபடி அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,06:46 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் விற்பனையை குறி வைத்து பன்னீர் கரும்பு சாகுபடி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் பிரதான பயிர்களாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கரும்பை அறிமுகம் செய்த பெருமை தர்மபுரி மாவட்ட விவசாயிகளுக்கு உண்டு.தர்மபுரி மாவட்டத்தில் வெல்லம், சர்க்கரை தயார் செய்ய பயன்படும் வெள்ளை கரும்புகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் கரும்புகள் பாலக்கோடு மற்றும் அரூர் கோபாலபுரம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு பதிவு செய்யப்பட்டு, அரவைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.சிறு விவசாயிகள் சாகுபடி செய்யப்படும் கரும்புகள் பாலக்கோடு, சோகத்தூர், செல்லியம்பட்டி, காரிமங்கலம் ஆகிய பகுதியில் உள்ள வெல்ல தயாரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைத்து, வெல்லம் தயார் செய்யப்பட்டு, சேலம், ஈரோடு சந்தைகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்யப்படும் கரும்புகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை வைத்துள்ள நிலையில், பல விவசாயிகள் வணிக ரீதியாக கரும்பு பயிர் செய்யும் முடிவுக்கு வந்து விட்டனர்.தற்போது, பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம் பகுதியில் விவசாயிகள் வணிக ரீதியாக வருவாய் தரக்கூடிய பன்னீர் கரும்புகளை (கறுப்பு கரும்பு) சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். பொங்கல் பண்டிகை மற்றும் பண்டிகை கால விற்பனைகளை குறி வைத்து மாவட்டத்தில் பல ஏக்கரில் பன்னீர் கரும்புகள் பயிர் செய்யப்பட்டு வருகிறது.விவசாயிகள் நேரடியாக பன்னீர் கரும்புகளை விற்பனை செய்யும் சந்தை வரவேற்பு உள்ளதால், பெரும்பாலான விவசாயிகள் இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக விற்பனை செய்வதோடு, பண்டிகை காலங்கள் மற்றும் பொங்கல் பண்டிகையின் போது, பன்னீர்கரும்புகளை அறுவடை செய்து நேரடி விற்பனையில் விவசாயிகள் ஈடுபடுவதால், கூடுதல் லாபம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## விதைச்சான்று நடைமுறை பயிற்சி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,07:14 IST

ஈரோடு: கொடுமுடி, மொடக்குறிச்சி யூனியனை சேர்ந்த வேளாண், தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கான விதைச்சான்று நடைமுறை பயிற்சி, ஈரோட்டில் நடந்தது.

வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) சின்னசாமி பயிற்சியை துவக்கி வைத்தார். உதவி இயக்குனர் (விதைச்சான்று) மகாதேவன் வரவேற்றார். வேளாண் துணை இயக்குனர் கார்த்திகேயன், விதை ஆய்வு துணை இயக்குனர் அண்ணாதுரை, விதைச்சான்று அலுவலர் (தொழில்நுட்பம்) சாமுவேல், சிவக்குமார், மாரிமுத்து ஆகியோர் விதைச்சான்று முறைகள், விதைகளின் தரம் நிர்ணயித்தல், பிரிப்பது குறித்து விளக்கம் அளித்தனர்.விதைச்சான்று அலுவலர் மோகனசுந்தரம் நன்றி கூறினார்.

## மழையின்றி மரவள்ளி பயிர் சாகுபடி பாதிப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2012,07:11 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் போதிய மழையில்லாததால், மானாவாரியில் சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளி பயிர் சாகுபடி, 50 சதவீதம் வரை பாதித்துள்ளது. ஈரோடு மாவட்டம் முழுவதும், 8,000 ஹெக்டேரில் நடப்பாண்டு மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள மானாவாரி நிலங்களில், பருவமழையை நம்பி, மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் பகுதிகளில், 1,500 ஹெக்டேரில் பயிரிடப்படுகிறது.தமிழகத்தில் இரு ஆண்டுக்கு முன் தென்பட்ட மாவு பூச்சி தாக்குதலால், மரவள்ளிக் கிழங்கில், மாவுச்சத்து, 28 சதவீதத்துக்கு பதிலாக வெறும், 18 சதவீதமே இருந்தது.இதை வைத்துக் கொண்டு தரமான ஸ்டார்ச் தயாரிக்க முடியாது. இதனால், மரவள்ளிக் கிழங்குக்கு குறைந்த விலையே கிடைத்தது. வழக்கமாக ஏக்கருக்கு, 12 டன் முதல், 15 டன் வரை மரவள்ளி விளைச்சல் கிடைக்கும். மாவுப்பூச்சி தாக்குதலால் வெறும், ஐந்து டன்னாக சாகுபடி குறைந்து, விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.மாவுப்பூச்சி தாக்குதல் ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டது. இதற்கிடையில், மஞ்சள் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்தது. மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளிக் கிழங்கு பாசனப் பகுதியில் விவசாயிகள் சாகுபடி செய்தனர்.

மரவள்ளிக் கிழங்கு மூலம் தயாரிக்கப்படும் பொருட்களான ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச்சுக்கு தேவை நடப்பாண்டு அதிகரித்துள்ளது. நடப்பாண்டு, மரவள்ளிக் கிழங்கின் விலை டன், 5,000 முதல் 7000 ரூபாய் வரை விற்கப்படும் என, விவசாயிகள் எதிர்பார்த்தனர்.ஆனால், போதிய பருவ

மழை பெய்யவில்லை. சென்ற சில நாட்களாக லேசானை மழை பெய்கிறது. சிறிது நேரம் பெய்யும் மழை மானாவாரி பயிருக்கு போதுமானதாக இல்லை. மானாவாரி நீரின்மையால் நன்கு வளர்ச்சியடையாமல், நோய்வாய்ப்பட்டது போல் செடிகள் காணப்படுகிறது. 15 டன் கிடைக்கும் நிலங்களில், ஐந்து டன் கிழங்கு கிடைப்பதே பெரிதாக உள்ளது.

தினகரன்

**வேளாண் கருவிகள் செயல்விளக்கம்**

பதிவு செய்த நேரம்:2012-09-03 11:34:23

கோவில்பட்டி, : தமிழ்நாடு அரசு வேளாண்மை பொறியியல்துறை சார்பில் கோவில்பட்டி அருகே சன்னதுபுதுக்குடி, ராஜாபுதுக்குடி, பன்னீர்குளம், ஆலம்பட்டி ஆகிய கிராமங்களில் விவசாயிகளுக்கு பல்வகை விதை விதைக்கும் கருவி, அகல பாத்தி அமைக்கும் கருவி, திரும்பும் மோல்டு போர்டு உழுவை இயந்திரம் மற்றும் சட்டி கலப்பைகள் குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் கணேசன், பொறியாளர்கள் சுல்தான், ஜான்கென்னடிசிங், நடராஜன், பாலமுருகன், திருப்பதி ஆகியோர் விவசாயிகளுக்கு கருவிகளின் பயன்பாடுகள் பற்றி விளக்கம் அளித்தனர்.